Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

மலர் 14
தபால் பெட்டி எண் 49
போன் 389
தேசிய தினசரி
இதழ் 64

யாழ்ப்பாணம் சித்திரை 3 ஸபர் 30 சனிக்கிழமை (15-4-72)

3 MAY 1972

அருள் விருந்து
"எவ்வளவான வாழ்க்கையின் மூலமாகவோ ஒருவன் மேலோன் ஆகமுடியாது" —தர்மசக்கரம்

மில்க்வைற்
தயாரிப்புளின் மேலுறைகள் சேகரித்து அனுப்பி அறிவு நூல்களை வாங்கிப்படியுங்கள்.

மில்க்வைற் சோப்
தொழிற்சாலை
த. பெ. இல. 77
யாழ்ப்பாணம்

அளவெட்டி நகைகள் மன்னாரில் அகப்பட்டன!

உள்ளே செல்வதற்கு வெளியாருக்குத்தடை!

சொழும்பு, வெள்ளி
அரசாங்கக் கூட்டுத்தாபன எல்லைகளுக்குள்ளேயோ அரசாங்கக் கைத்தொழில் நிறுவனப்பகுதிகளுக்குள்ளேயோ வெளிநாட்டவர் எவரும் கைத்தொழில் அமைச்சரின் முன்அனுமதியின்றி அனுமதிக்கப்படமாட்டார்கள்.

வெளியார் எவரையும் இப்பகுதிகளுக்குள் அனுமதிக்கக் கூடாதென்ற உத்தரவு ஏற்கனவே இருந்தாலும் அது சரியாகக் கடைப்பிடிக்கப்படவில்லையென்றும் இனிமேல் இந்த உத்தரவு கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்றும் கைத்தொழில் அமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு எம் சிவானந்தன் அறிவித்திருக்கிறார்.

கிழக்கு ஐரோப்பிய நாடொன்றின் உதவியுடன் உருவாகிவரும் அரசாங்கக் கூட்டுத்தாபனக் கட்டிடப் பகுதியை மேற்கு ஐரோப்பிய நாடொன்றின் உதவியுடன் வந்த ஒரு கோஷ்டியினர் சமீபத்தில் புகைப்படம் எடுத்ததாகக் கறப்படும் சம்பவத்தைத் தொடர்ந்தே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (ச)

தவறிய தாலிக்கொடி மீண்டும் கிடைத்தது!

சங்கானை, வெள்ளி
யாழ்ப்பாணத்திலுள்ள பிறபன நிலையத்திற்கு தவறவிட்ட தாலியும் கொடியும் பத்திரமாக உரிமையாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது.

யாழ் பிறபன நிலையத்தில் தபாற்செல்ற பெண்மணி ஒருவரின் கொடி வேறாகவும் தாலிவேறாகவும் தவறிவிட்டதை அப்பெண்மணி வீடு செல்லும்போதும் கவனிக்கவில்லை. சிறிது நேரத்தின் பின் அதன் நினைவு வரவே அப்பெண்மணி பிறபன நிலையத்தில் வந்து விசாரித்து தாலிக்கொடியை பெற்றுக் கொண்டார்.

அந்நிலையத்தில் பணியாற்றும் திரு பஞ்சாக்ஷரம் என்பவர் தாலியையும் அவரைப்பகுதியில் வேலை செய்யும் திரு வி வாசிப்பிள்ளை என்பவர் கொடியையும் கண்டெடுத்து மனேச்சரிடம் ஒப்படைத்திருந்தனர்.

வடபகுதித் தவறணைகளில் 1000 பேருக்கு வேலை

7000 சீவல் தொழிலாளர் சங்கங்களில் சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், சனி
வடபகுதியில் உள்ள 208 கள்ளுத் தவறணைகளில் சுமார் 1000 பேர்களுக்கு வேலைகிடைக்கும். கள்ளுத் தவறணை ஊழியர்களின் தெரிவு நடைபெற்றுவிட்டது. அடுத்த வாரம் இவர்களுக்கு நியமனம் வழங்கப்படும்.

திடீர் ஆபிரிகுத்தி வேலைவாய்ப்பு உதவி அதிகாரியும் வடக்கில் கள்ளுத்தவறணைத் திட்டத்தை அமுல் செய்வதற்கு பொறுப்பானவருமான திரு. கே. சண்முகலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. சண்முகலிங்கம் மேலும் கூறியதாவது சீவல் தொழிலாளர்களைப் பதிவு செய்யும் வேலை, கடந்த 10-ம் திகதியுடன் முடிந்து விட்டது. வடபகுதியில் உள்ள 30 கள் உற்பத்தி விற்பனைச் சங்கங்களில் 7000 சீவல் தொழிலாளர் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர்.

கள்ளுத் தவறணை அமைப்பதற்கான 208 இடங்களும் தெரிவு செய்யப்பட்டுவிட்டன. ஏற்கனவே தீர்மானித்தபடி மே மாதம் 1ம் திகதி கள்ளுத் தவறணைகள் திறக்கப்படும்.

யாழ்ப்பாணம், சனி
பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியற்துறை விரிவுரையாளர்களைக் கடமையாற்றிய டாக்டர் எல். செல்வவிநாயகம் யுனெஸ்கோ புலமைப் பரிசில் பெற்று செக்கோஸ்லாவாக்கியா சென்றுள்ளார்.

இவர் நீரியல் திட்டம் சம்பந்தமாக ஆய்வு பயிற்சி பெறவார்.

டாக்டர் செல்வவிநாயகம் வாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் கோண்டாவில் செல்வத்துரையின் மகனுமாவார்.

தாலிக்கொடி களும் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்தன பல கொள்ளைகள் அம்பலம்

யாழ்ப்பாணம் சனி
அளவெட்டியில் அடைவுகடையிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகளில் பெருந்தொகையானவை மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. தாலிக்கொடிகள் சங்கிலிகள் உட்பட நூற்றிஎழுபத்தியேழு நகைகள் மன்னாரில் ஒரு வீட்டு வளவில் புதைக்கப்பட்டிருந்தன. பொலிசாருக்குக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்து மன்னார் உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. கந்தையா, பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. நவரத்தினராசா ஆகியோர்தலைமையிற் சென்ற பொலிஸ்கோஷ்டியினர் நிலத்தைத் தோண்டி இந்த நகைகளைக் கைப்பற்றினர்.

நகைகள் கண்டெடுக்கப்பட்ட வீட்டில் வசித்துவருபவர் சந்தேகத்தின் மீது பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைசெய்யப்பட்டுவருகிறார். இவரது சொந்த இடம் தெல்லிப்பழையைச் சேர்ந்த வீமன்காமம் என்று தெரியவந்துள்ளது.

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த தம்பிமுத்து என்னும் நகை அடைவுபிடிக்கத்தரவைப் பெற்றவரின் வீட்டில் சில வாரங்களுக்கு முன் அதிகாலையில் கொள்ளைக் கோஷ்டி ஒன்று நுழைந்து தம்பிமுத்துவையும் அவரது மனைவியையும் தாக்கிக்கட்டி வைத்து ரசாயன மருந்தொன்றை மணக்கக் கொடுத்து மயக்கமடையச் செய்ததுடன் அவர்களின் மகனைப் பலமுறுத்தி நகைகளையும் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றதுடன் மகனையும்கட்டிவைத்துவிட்டுத் தப்பிச்சென்றது 'ஈழநாடு' வாசகர்கள் அறிந்ததே.

இக்கொள்ளையைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் பல இடங்களுக்கும் சென்றுவிசாரணை நடத்தியதுடன் பொலிஸ்நாயொன்றையும் சிலவிடங்களில் கொண்டுசென்று சிலவற்றையும் இறைத்ததுடன் பலவீடுகளின் வளவுகளையும் தோண்டி ஆராய்ந்தனர். இதுசம்பந்தமாகப் பலர் விசாரணைசெய்யப்பட்டனர். சந்தேகத்தின்மீது சிலர் பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். இக்கொள்ளை சம்பந்தமாகப் பொலிசாருக்குப்பல தகவல்கள் கிடைத்தன ஒவ்வொரு தகவல்மீதும் விசாரணை செய்யப்பட்டது

நாயைக் கொன்று நகை கொள்ளை

சுமார் இரண்டு முக்கால் மாதங்களுக்கு முன்னர் மன்னாரில் திருமதி அழகரத்தினம் என்பவருடைய வீட்டினுள் நள்ளிரவில் புகுந்த கொள்ளை கோஷ்டியொன்று அவ்வீட்டிலிருந்த நாய்க்கு நஞ்சூட்டிக் கொலைசெய்துவிட்டு அவ்வீட்டிலிருந்த சுமார் பதினையாயிரம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றது. இக் கொள்ளையைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டிருந்த பொலிசாருக்கு கடைசியாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்தே வீமன்காமத்தைச்சேர்ந்தவர் வசித்து வரும் வீடும் வளவும் சோதனையிடப்பட்டது. இந்த வளவுக்குள் நிலத்தைத் தோண்டும் பொழுதே 177 நகைகள் கண்டெடுக்கப்பட்டன இவை அளவெட்டியில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளாக இருக்கக் கூடுமென்ற சந்தேகத்தில் அளவெட்டி அடைவுகடைக்காரர் தம்பிமுத்து கனகம் பொலிசைச்சேர்ந்த இன்ஸ்பெக்டர் குணரத்தினத்துடனும் சார்ஜன்ட் ராஜரத்தினத்துடனும் நேற்றுமன்னார் போய்ச்சேர்ந்தார்.

இச்செய்தி அச்சுக்குப் போகும் பொழுது மன்னாரில் கண்டெடுக்கப்பட்ட நகைகளில் பெரும்பாலானவைகளைத் தம்மிடம் அடகுவைக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளேயென்பதை திரு தம்பிமுத்து அடையாளம் காட்டியதாக அறியப்படுகிறது.

மன்னாரில் கண்டுபிடிக்கப்பட்ட நகைகளின் பொறுமதி சுமார் இரண்டு லக்ஷம் ரூபாவாகவிருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது

(5-ம் பக்கம் பார்க்க)

யாழ் தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - லக்ஷ்மி
நடித்த
காவல் தெய்வம்

REGAL (Jaffna)
Daily 10-30 a. m.
5-15, 7-15 p.m.
Jeffrey Hunter
in
HELL TO ETERNITY
(war film)

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ
நடித்த
மன சாட்சி

தினசரி 2-00 இரவு 9-45
எம். எஸ். ஆர்.
விஜயகுமாரி
நடித்த
சாரதா

ராணி சிவாஜிகணேசன்—ஜெயலலிதா
[யாழ்ப்பாணம்] சுந்தராராஜன்—சந்திரபாபு
தினசரி 4 காட்சிகள் மற்றும்பலர் நடித்த
சஜாதாவின் **ராஜா** (வர்ணச் சித்திரம்)

மகாத்மா தினசரி 3 காட்சிகள்
(நெல்லியடி) V. S. T. பிலிம்ஸ்
குத்து விளக்கு

வெலிங்டன் (யாழ்.நகர்) **லிடோ**
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 10-00 சனி, ஞாயிறு காலை 10-30
தினசரி காலை 10-00 பி.ப. 2-00, மாலை 6-00 இரவு 9-30

★சிவாஜி
★லக்ஷ்மி

★முத்துராமன்
★நிர்மலா

நம்பியார்—நாகேஷ் - சச்சு
மற்றும் பலர் நடித்த
தங்கைக்காக
இசை: விஸ்வநாதன் டைரக்ஷன்: யோகானந்த்

யாழ். வின்சர் திரையில்
தினசரி 4 காட்சிகள் காண்பிக்கப்படுகிறது.
* ஜெமினி * சௌகார்ஜானகி
* ஜெயந்தி * நாகேஷ் * சச்சு
நடித்த
இரு கோடுகள்
திரைக்கதை, டைரக்ஷன்: கே. பாலசந்தர்

ராஜா
(யாழ்ப்பாணம்)
போன்: 7180
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர் ★ கே. ஆர். விஜயா
★ முத்துராமன் ★ தங்கவேலு நடித்த
நிலவே நீ சாட்சி
(டைரக்ஷன்: P. மாதவன்)
(சிறந்த படத்திற்கான பரிசுபெற்றது)

ஊரி விளம்பரம்
இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் ஒட்டுவேலைகள் பல்லுச் சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜின் பாகங்களின் மேற்பரப்பு வலிமை செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 4162

நாகம்ஸ் சினிமா
கல்லூரி
மாலை 4-30 மணிக்கும்
MARNIE
தினசரி 6-30 இரவு 9-45
எம்.ஜி. ஆர்-ஜெயலலிதா
தனிப்பிறவி
(புத்தம் புதிய கொப்பி)

பவானி
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
கண்ணன் என் காதலன்

சாந்தி
(சுன்னாகம்)
சனி மாலை 4-15 மணிக்கும்
LONDON IN THE RAW
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
தினசரி 6-15, 9-30
சனி 10 ஞாயிறு 10, 2-30
சிவாஜி-ஜெயலலிதா
நடித்த
கலாட்டா கல்யாணம்

MANOHARA
Jaffna
Daily 10-30 a m 4-45 p.m.
7 GOLDEN WOMEN
(007)
6-30, 10-00
Joy Nanayakare
in
SHJYE NOTTUWA
(singhala)

நியூ கலைவாணன்
இணுவில்
தினசரி மாலை 4-45
OUR MAN IN JAMAICA
தினசரி 6-30, 10-00
சிவாஜி — தேவிகா
நடித்த
ஆண்டவன் கட்டளை

சோதிடம்
நக்கத்திரம், வயது, பூமின் பெயர், 60க்குள் ஒரு இலக்கம் குறித்து, முந்திரையுடன் கடிதமூலமும் நேரிலும் பதில் பெறலாம். இவர் ஆருடம், டாக்டர் ந. சண்முகராஜா, ஜே. பி., கொக்குவில். 4175

விநாயகருக்கு
தமிழ் சித்திரை 1973-1973 வரையுள்ள இராசிப்பலன்கள் ஒவ்வொரு ராசிக்கும் ஒரு புத்தகமாகப் பன்னிரண்டு ராசிக்குமுள்ளன விலை ரூபா 1-50. வே. த. மயில்வாகனம் ஆலர்பாடி சோதிடநிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 4904

4 ஸ்ரீ விக்கோடா, ஒரிஜினல் எஞ்சின், கலன் 35 கிலோமீட்டர், புதிய டயர் பைட்டரி செல்லப்பா, மூளாய் ரோட் பைடுக்கோகிடை. 4929

கல்வி
Holiday tuitions-Home visited இலைப்பாடிய பைட்டாரி ஆசிரியர்கள் வீடுகளுக்கு சென்று ஆங்கிலம், எண்ணிதம், குடியியல், சரித்திரம் புவியியல் ஆகிய பாடங்கள் கற்றுக் கொடுப்பார்கள். விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 4909. C/o சமுநாடு. யாழ்ப்பாணம். 4909

தினசரி அதிர்ஷ்ட சீட்டிழுப்பு
கொழும்பு வெஸ்லி 16-ம் இலக்க தினசரி அதிர்ஷ்ட சீட்டிழுப்பு நாளை ஞாயிறு மாலை கொழும்பிலுள்ள தேசிய

தங்கப்பதக்கம் பெற்றார்
இலங்கை இளம் கலைஞர் மன்றத்தார் அகில இலங்கை அடிப்படையில் அண்மையில் நடத்திய இசைப் போட்டியில் செல்வன் கணேசபாபதி சேர்த்தன் தங்கப்பதக்கம் பெற்றார்
(கமிடு நி)

நியமனம்
மீசாலை, வெஸ்லி பைடிருப்பு மகாவித்தியாலயத்திலிருந்து உசுமேச்சேர்ந்த வித்துவான் திரு. எஸ். சரவணமுத்து பதவி உயர்வு பெற்று விடத்தற்பளை கமலாம்பிகை வித்தியாலயத்துக்கு தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

லொத்தர் சபைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

முக்கிய அறிவித்தல்
10-4-1971 முதல் எமது
ஆர். வி. ஜி. பீடிகளுக்கு
விலை குறைக்கப்பட்டுள்ளது
சில்லறை விலை விபரம்

1 மண்டல் பீடி	ரூபா 12 - 65 சதம்
2 மண்டல் பீடி	ரூபா 25 - 25 சதம்
1 கட்டு பீடி	- 70 சதம்
1 பீடி	- 03 சதம்

ஆர். வி. ஜி. பீடி தயாரிப்பாளர்
47, பீச் ரோட்
யாழ்ப்பாணம்.
போன்: 230
தந்தி: ஆர்விஜி

செவன ஒடுகள் மலிவு விற்பனை
தேசிய சிறுவகைத்தொழிற் கூட்டுத்தாபனத்தின் ஒடுகூடங்கள் பண்டாரவன்னியன் செங்கல் ஒடுகள் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் இரண்டாம், மூன்றாம்தர ஒடுகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

விபரங்கள்	பழைய விலை	புதிய விலை
ii-ம் தர 1000 ஒடுகள்	ரூபா 175/-	ரூபா 150/-
iii-ம் தர 1000 ஒடுகள்	ரூபா 175/-	ரூபா 50/-

இருப்பு மிகவும் குறைவாக உள்ளதால் வாங்குவதற்கு முந்துங்கள். அத்துடன் இச்சலுகை நீடிப்பதற்கு இடமில்லாமலிருக்கலாம்.
மேலும் விபரங்களுக்கு தொழிற்சாலை முகாமையாளருக்கோ அல்லது கூட்டுத்தாபனத்தின் பிராந்திய விற்பனைப் பிரதிநிதிகளுக்கோ விண்ணப்பிக்கவும்.
1. V. V. இராமசாமிப்பிள்ளை அன் சன்ஸ், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
2. K. V. கந்தப்பர் அன் கோ, மந்திகை, புலோலி
3. S. இராசையா, இராணி ஸ்ரோர்ஸ், சுன்னாகம்.
4. பருத்தித்துறை, வல்லிபுரம் மேற்கு, முல்லைத்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்.

முகாமையாளர்,
தேசிய சிறுவகைத்தொழிற் கூட்டுத்தாபனம்
பண்டாரவன்னியன்
செங்கல் ஒடுகள் தொழிற்சாலை,
ஒடுகூடம். 3925

நிக்ஸனின் உயர் ஆலோசகர் சைகோன் விரைகிறார்

யுத்த நிலைமையை ஆராய்வார்

வாஷிங்டன், ஏப் 14 வியட்நாம் இராணுவ நிலைமை பற்றி நேரில் ஆராய்ந்தறிவதற்காக அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனின் உயர்தேசிய பாதுகாப்பு ஆலோசகர்களில் ஒருவரான மேஜர் ஜெனரல் அலெக்ஸாண்டர் கேக்லே சைகோனுக்கு ஜனாதிபதி நிக்ஸன் அனுப்பிவைத்துள்ளார்.

தென்வியட்நாமின் பல பகுதிகளை வியட்நாமிய துருப்புக்களும் வடவியட்நாம் துருப்புக்களும் ராக்கெட்டுகள் மற்றும் எறிகணைகளைக் கொண்டு கடுமையாகத் தாக்கிவருகின்றனர். சில நகரங்களையும் அவர்கள் கைப்பற்றியுள்ளனர். இந்த நிலையில் மேஜர் ஜெனரல் அலெக்ஸாண்டர் கேக்லே விஜயம் முக்கியத்துவம் பெறுவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இவ்வாலோசகரை சைகோனுக்கு நிக்ஸன் அனுப்பிவைத்ததன் மூலம் அங்கு நிலவும் அபாய நிலையை நிக்ஸன் உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது.

இவ்வாலோசகரை அங்கு அனுப்பிவைத்ததன் மூலம் அமெரிக்கா தனது துருப்புக்களை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. ராஜாங்க அமைச்சரைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளையில் வியட்நாமில் பலநிலைகளிலும் கடுஞ்சண்டை நடந்துகொண்டிருக்கின்றன. சைகோனுக்கு தென்மேற்கேயுள்ள மாகாணத் தலைநகர் தென்வியட்நாம் துருப்புக்களின் கட்டுப்பாட்டிலேயே இருப்பதாக சைகோன் அரசு அதிகாரி தெரிவித்தார். வடபகுதி முனைகளிலும் கடும்சமர் நடக்கிறது. வீதிகளிலோர் நடந்துவண்ணமே இருக்கிறது; வியட்நாமியர் கைப்பற்றிய விமானத்தளம் இப்பொழுதும் அவர்களிடமே இருப்பதாக மற்றுமோர் செய்தி தெரிவிக்கிறது.

அதிபரின் அதிகாரத்தை

கட்டுப்படுத்தும்மசோதாவுக்கு அமோக ஆதரவு

வெளிநாடுகளில் இராணுவ நடவடிக்கைகளை எடுக்கும் அதிபரின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் மசோதா அமெரிக்க செனட்சபையில் மிகப் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது.

வியட்நாம் போர் சூழ்நிலைகளில் அமெரிக்க அதிபர் தமது அதிகாரத்தைக் கொண்டு இதுவரை எடுத்த நடவடிக்கை எடுத்தவந்தார். ஆனால் இச்சட்டம் அவரது அதிகாரத்தைக் குறைக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த மசோதா பிரதிநிதிசபைக்கு செல்லவிருக்கிறது.

பாரிஸ் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க யு.எஸ். விருப்பம்

வியட்நாம் பிரச்னை சம்பந்தமாக பாரிஸில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க அமெரிக்கா விரும்புவதாக அமெரிக்கராஜாங்கஇலாகா பேச்சாளர் தெரிவித்தார். அமெரிக்காவின் இந்த முடிவை இம்மாதம் 8-ம் தேதி ஹனோய்க்கு அறிவித்ததாகவும் அவர்மேலும் சொன்னார்.

வியட்நாம் பிரச்னை சம்பந்தமாக பாரிஸில் அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கும் வியட்நாம் பிரதிநிதிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப் பேச்சுவார்த்தையின் பொழுது அமெரிக்கா ஒன்பது அம்சத்திட்டத்தையும் சமர்ப்பித்தது. இப் பேச்சுவார்த்தைகளில் வடவியட்நாமியர் சமீபகாலம் நடந்து கொள்ளவில்லையென்று அமெரிக்க பேச்சுவார்த்தைகளிலிருந்து விலகிக்கொண்டது. இதனைத் தொடர்ந்தே தென்வியட்நாம் மீது வியட்நாம் துருப்புக்களும் வடவியட்நாம் துருப்புக்களும் தங்கள் தாக்குதல்களை தீவிரப்படுத்தினர்.

பாக். தேசிய சட்டசபை கூடுகிறது

கராச்சி, ஏப். 14

பாகிஸ்தானின் தேசிய சட்டசபை இன்று கூடுகிறது. ஜனாதிபதி பூட்டோவின் மக்கள் கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவிப்பது, ஆகஸ்ட் 14 க் திதி வரை இராணுவச் சட்டம் தொடர்ந்திருப்பது ஆகிய இரு விஷயங்களுமே இக் கூட்டத்தில் முக்கிய இடம் பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது. இக் கூட்டத்திற்கு பாகிஸ்தான் மாநிலத்தில் பெரும் பான்மைப் பலம் பெற்ற தேசிய அவாமிக்கட்சியின் தலைவர் திரு. வலிகானும் ஜாமாய் உலமாமி இஸ்லாம் கட்சியும் சில ஆலோசனைகளை சமர்ப்பித்துள்ளன. இவர்களது ஆலோசனைகள் எந்தளவு அங்கீகரிக்கப்படுகிறதென்பதைப் பொறுத்தே இவ்விரு கட்சிகளின் எதிர்கால நடவடிக்கை அமையும் என இக் கட்சிகளின் பேச்சாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தையில் தாகசாந்தி

பருத்தித்துறை, வெள்ளி

பருத்தித்துறையில் தண்ணீர் இன்றிக் கஷ்டப்பட்டபோது மக்களின் கஷ்டத்தை எம்.ஜி.ஆர். பொதுப்பணி மன்றத்தினர் நீக்கியுள்ளனர். இவர்கள் சாலை முதல் மாலைவரை இச்சந்தையில் வைத்த குடிநீரை விநியோகிப்பதினால் இவர்களின் கஷ்டம் நீங்கி தாகசாந்தி பெற ஏதுவாகவுள்ளது.

கிணற்றுள் வீழ்ந்து மரணம்

வவுனியா, வெள்ளி

கிணற்றடியில் வழுக்கிய நிலையில் சிறுவன் கிணற்றுள் வீழ்ந்து மரணமானான். இச் சம்பவம் வவுனியாவிலுள்ள கோவில் குளத்தில் இடம் பெற்றது. 9 வயதான இச் சிறுவன் விபத்து மரணமென மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. மரண விசாரணை அதிகாரி திரு. வி. விக்னராசா மரண விசாரணை நடத்தினார்.

ஆலோசகர்

பதிவு செய்யப்பட்டுள்ள

30 கள் உற்பத்தி விற்பனவு சங்கங்களின் விபரம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வடபகுதியில் கூறப்பட்ட முறையின் கீழ் 30 சங்கங்களே மட்டுமே இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த 30 சங்கங்கள் மட்டுமே இனி இயங்கவிருக்கின்றன. இச்சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களும், அவை அடங்கியுள்ள பகுதிகளும் பின்வருமாறு:

பருத்தித்துறை உ.உ.வி.ச. வல்வெட்டித்துறை. பருத்தித்துறை, குடத்தனை. புலோலி உ. உ. வி. ச.

புலோலி கிராமசபைப் பகுதி, கல்வாய்வடக்கு கட்டைவேலி உ. உ. வி. ச. கட்டைவேலி கிராமசபைப்பகுதி, நெல்லியடி பட்டினசபைப்பகுதி.

உடுப்பிட்டி உ. உ. வி. ச. உடுப்பிட்டிக்கிராமசபைப் பகுதி.

வலிகிழக்கு உ. உ. வி. ச. அச்சுவேலி கிராமசபைப் பகுதி. புத்தூர் வி. ச. பகுதி வலிதெற்கு உ. உ. வி. ச. சோப்பாய், நீர்வேலி கிராமசபைப்பகுதிகளும். உரும்பராய் பட்டினசபைப் பகுதியும்.

தெல்லிப்பளை உ. உ. வி. ச. தெல்லிப்பளை, மயிலிட்டி கிராமசபைப்பகுதி, காங்கேசன்துறை பட்டினசபைப் பகுதி.

அளவெட்டி, மல்லாகம் உ. உ. வி. ச. மல்லாகம், அளவெட்டிக் கிராமசபைப்பகுதிகள்.

கன்னாகம் உ. உ. வி. ச. கன்னாகம் பட்டினசபைப் பகுதி

இணுவில் உ. உ. வி. ச. உடுவில் கிராமசபைப் பகுதி.

சங்கானை உ. உ. வி. ச. சங்கானைப் பட்டினசபை பகுதி

சுழிபுரம் உ. உ. வி. ச. சுழிபுரம் கிராமசபைப் பகுதி

பண்டத்தரிப்பு உ. உ. வி. ச. பண்டத்தரிப்பு பட்டினசபைப்பகுதி.

இளவாலை உ. உ. வி. ச. பண்டத்தரிப்பு கிராமசபைப்பகுதி.

சண்டிலிப்பாய்- மாசியப்பிட்டி உ. உ. வி. ச. சண்டிலிப்பாய் கிராமசபைப்பகுதி.

மானிப்பாய்-நவாலி உ. உ. வி. ச. மானிப்பாய் பட்டினசபை சண்டிலிப்பாய்கிராமசபைப் பகுதிகள்.

வட்டுக்கோட்டை- அராலி உ. உ. வி. ச. மாசியப்பிட்டி, வட்டுக்கோட்டை, அராலி கிராமசபைப்பகுதிகள்.

காரைநகர் உ. உ. வி. ச. காரைநகர் வடக்கு காரைநகர் தெற்கு கிராமசபைப் பகுதிகள்.

தீவுப்பகுதி- ஊர்காவற்றுறை உ. உ. வி. ச. ஊர்காவற்றுறைப்பட்டினசபைப்பகுதி, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு கிராமசபைப் பகுதிகள்.

திருநெல்வேலி உ. உ. வி. ச. நல்லூர் கிராமசபைப் பகுதிகள்.

கோண்டாவில் உ. உ. வி. ச. கோண்டாவில், கொக்குவில் கிராமசபைப்பகுதிகள்.

யாழ்ப்பாண மாநகர உ. உ. வி. ச.

யாழ் மாநகர 1ம், 5ம், 13ம், 23ம் வட்டாரம் ஆகியபகுதிகள்.

அரியாலை உ. உ. வி. ச.

யாழ். மாநகரசபை 6ம் 7ம், 8ம், 9ம், 10ம், 11ம், 12ம் வட்டாரங்களும், நல்லூர் கிராமசபை 10ம், 11ம், 12ம் வட்டாரங்களும் கொண்ட பகுதிகள்.

சாவகச்சேரி உ. உ. வி. ச. சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி கிராமசபைப் பகுதிகள்.

வதிரி உ. உ. வி. ச. வதிரி, நாவற்குழி கிராமசபைப் பகுதிகள்.

தென்மராட்சி கிழக்கு உ. உ. வி. ச. கச்சாய், மிருசுவில் வரணி கிராமசபைப்பகுதி.

கிளிநொச்சி உ. உ. வி. ச. கிளிநொச்சி, முரசுமோட்டை, வன்னிச்குளம் ப. நோ. கூ. சங்கப் பகுதிகளும்.

பூநகரி உ. உ. வி. ச. இரணைதீவு, பூநகரி, பளை வரணி கிராமசபைப் பகுதிகள்.

பச்சிலைப்பள்ளி உ. உ. வி. ச. முகமாலை, புலோப்பளை, செம்பியன்பற்று, முல்லைத்தீவு ஆகிய கிராமசபைப் பகுதிகளும் பச்சிலைப்பள்ளி அரியாதிவிரிவுகளும் பகுதிகளும்.

வேலணை உ. உ. வி. ச. மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை, புங்குடுதீவு, நெடுந்தீவு ஆகியபகுதிகள்.

'ஒழுக்கமுள்ள பிள்ளை நாட்டின்சொத்து'

நீர்கொழும்பு, வெள்ளி

"நல்லொழுக்கமுள்ள, பண்புள்ள ஒரு பிள்ளை நாட்டின் சொத்து. ஏனைய அரசியல் உத்தியோகத்தர்கள் போலல்லாது இச்சொத்தை வருங்கால நற்சந்ததியை உருவாக்குவதில் ஆசிரியர்களுக்குப் பெரும் பொறுப்புண்டு."

கல்கிஸை ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. கே. டி. சில்வா இத்தொகுதியில் நடைபெற்ற பெற்றோர் ஆசிரியர் சங்க மகாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் தவறான கல்விமுறையும் பெற்றோர்களின் அசட்டையீனமுமே பயங்கரவாத நிகழ்ச்சிகளுக்குக் காரணம் எனக் குறிப்பிட்டு பெற்றோர் ஆசிரியர் ஆகிய இரு திறத்தாரும் புதிய கல்வித் திட்டத்தைப் பயனுள்ளதாக உழைக்க வேண்டும் எனக் கூறினார்.

அருளுரை

கொழும்பு வெள்ளி

இம்மாதம் 17-ம் திகதி முதல் 25-ம் திகதி வரை தினமும் மாலையில் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் காஞ்சிபுரம்தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளுரை ஆற்றுவார். இந்நிகழ்ச்சிகளை முறையே தொண்டைப்பிரபுக்கள் பெருமன்றம், திருவள்ளுவர் உள்ளம், சித்தாந்தச் செம்பொருள், திருமூலர் ஆகிய தமிழ், சம்பந்தர் திருநெறிய தமிழ், அப்பர் தமிழ்மாலை, சுந்தரர் செந்தமிழ், மணிவாசகர் மணிவாசகத்தை எனும் தலைப்புகளில் நிகழ்த்த இவ் அருளுரைகள் இடம் பெறும். இந்தத் தமிழ் பேருரைகள் கொழும்புத் தமிழ் சங்கத்தினரால் நடாத்தப்படுகிறது.

லிபியாவின் ஈராக் தூதுவர் திருப்பி அழைக்கப்பட்டார்

சோவியத் ஈராக் ஒப்பந்த எதிரொலி?

திரிபோலி, ஏப். 14

லிபிய ஈராக்கிலுள்ள தனது தூதுவரைத் திருப்பி அழைத்துள்ளது.

ஈராக் அண்மையில் சோவியத் யூனியனுடன் செய்த கொண்ட 15 வருட ஒப்பந்தத்தை எதிர்க்கும் முறையிலேயே லிபிய ஈராக் தலைநகரான பக்தாத்திலிருந்த தனது தூதுவரைத் திருப்பி அழைத்தது என லிபிய அரசாங்கக் குறிப்பு தெரிவிக்கிறது.

ஈராக்கும் சோவியத் யூனியனும் செய்து கொண்ட 15 வருட ஒப்பந்தம் அரபு உலகுக் கொவ்வாத விரோதமானது மட்டுமல்ல அரபு சீர்கெடுக்கும் ஒன்றாகுமென லிபிய அரசாங்கம் குறிப்பிட்டு மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கும் திருப்பி அழைத்தது

லிபிய தனது தூதுவரைத் திருப்பி அழைத்தலைத் தொடர்ந்து ஈராக்கும் தனது தூதுவரை லிபியாவிலிருந்து திருப்பி அழைத்துள்ளது. ஈராக் சோவியத் யூனியனுடன் செய்து கொண்ட 15 வருட ஒப்பந்தம் ஒரு இராணுவ ஒப்பந்தமல்லவென்றும், ஈராக் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் தனது பொருளாதார நிலைமையைச் சீர்படுத்தவுமே செய்து கொள்ளப்பட்டதோர் ஒப்பந்தமென ஈராக் உப ஜனாதிபதி கூறியுள்ளார்.

"பா இடையிட்ட உரைநடை அரங்கம்"

யாழ். இலக்கியவட்டத்தின் புது முயற்சி

யாழ்ப்பாணம், சனி

"விக்னேஸ்வரா, கதாப்பிரசங்கம், கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகளையும் பா இடையிட்ட உரைநடை அரங்கம் இனிமேல் தோற்கடித்துவிடலாம்.'

இவ்வாறு யாழ். இலக்கிய வட்டம் நடத்திய பா இடையிட்ட உரைநடையரங்கு விழாவில் கருத்துத் தெரிவித்துப் பேசிய எழுத்தாளர் சொக்கன் கூறினார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் பா இடையிட்ட உரைநடையரங்கை மக்களாதரவுடன் அரங்கேற்றினால் இதைட்டாயம் பொதுமக்களின் செல்வாக்கைப் பெற்றுவிடும் என்று கூறினார்.

யாழ். மாநகரசபை பொழுதுபோக்கு மண்டபத்தில் இரசிகமணி கனக. செந்திநாதன் தலைமையில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சியைப் பாராட்டிப் பேசிய "சிற்பி" புதுமையை விரும்பும் மக்கள் கட்டாயம் இந்த நிகழ்ச்சியை வரவேற்பார்கள் என்றும் இதை ஊரெங்கும் அறிமுகம் செய்துவைக்க யாழ்.

இலக்கியவட்டம் முயல வேண்டும் என்றும் கூறினார்.

நாடக எழுத்தாளரும் நடிகருமாகிய திரு. ஏ. நீ. பொன்னுத்துரை பேசுகையில் பா இடையிட்ட உரைநடையரங்கம் வெற்றிபெற முத்துவகையினரின் ஆதரவு - எழுத்தாளன் நடிகன், சங்கீத வித்துவான் ஆகியோரது ஒத்துழைப்பு இன்றியமையாததென்றும் இந்நிகழ்ச்சி வரவர ஒற்றுமையை வளர்க்கப் பெரிதும் உதவும் என்றும் கூறினார்.

தலைமைவகித்துப் பேசிய இரசிகமணி கனக. செந்திநாதன் இப்புதுமுயற்சியை பரிசோதனை ரீதியாகச் செய்துபார்த்த யாழ். இலக்கியவட்டத்தைப் பாராட்டினார்.

நாவலர்பெருமான். திருவள்ளுவர் என்னும் தலைப்பில் கீழே மேற்படி நிகழ்ச்சியை கவிஞர் வி. கந்தவனம், கவிஞர் காவை செ. கந்தரம்பிள்ளை, கவிஞர் வே. ஐயாத்துரை ஆகியோர் நிகழ்த்தினர்.

.....

உங்கள் பலன்

தெதிரை மாதம் 3-ந்திகதி (15-4-1972)

மேஷம்: பிறந்த நாளதில் நினைவு நிழலெனத் தங்கிநூக்கும். கடமையில் சோர்வு தென்படும். மனத்திடம் வேண்டும்.

ரிஷபம்: மக்களால் மகிழ்ச்சி. இவற்றுடன் கண்ணியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். செல்வாக்குப் பெருகும்.

மிதுனம்: குறை கேட்க நேரிடும். கடமையில் தடைதோன்றும். நஷ்டத்திற்கு இடமுண்டு. நாவடக்கம் நன்று.

கடகம்: நாய்வழித் தனவரவுக்கு இடமுண்டு. குடும்ப வாழ்க்கையில் சமுமான சூழ்நிலை தென்படும். நல்ல நாள்.

சிம்மம்: குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும். தொழில் புரியும் இடத்தில் நல்லமாற்றங்களுண்டு.

கன்னி: தூரதேச வாசம், உற்றோரிற் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்திற்கும் இடமேற்படலாம்.

துலாம்: தூரத்து உறவினர்ஒருவர் உங்களுடன் ஒற்றுமைப்படுதற்கு முன்வருவார். டாக்டர்களுக்கு சிறப்பான தினம்.

விருச்சிகம்: பெருக்குடனே நலமும் நிறைந்த பாதிக்கப்படலாம். நம்பிக்கையைப் பலமூலம் பணமும் பறிபோகலாம்.

தனுசு: பொதுப்பணிகளில் ஈடுபடுவதன்மூலம் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நெஞ்சநம்பிக்கை மேலோங்கி நிற்கும்.

மகரம்: எதிர்பார்த்த விடயத்தில் நஷ்டம் ஏற்படலாம் நண்பர்களாலும் தொல்லைகள் அதிகரிக்கும்.

கும்பம்: வெளியிடத் தொடர்புகள்மூலம் செல்வாக்கும் பெருகும். நீண்ட நாள் பிணக்குகள் இன்று நிவர்த்தியாகும்.

மீனம்: எதிர்பாராத முறையில் பொருட்செலவுக்கு இடமுண்டு. தொழில்துறையில் சிறந்த மனக்கசப்பு தென்படலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

வெற்றிதோல்வி இல்லை

உடும்பராய், வெள்ளி

உடும்பராய் விளையாட்டு அரங்கப்புச் சமவலுவாக நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட்போட்டியில் உடுவில் ஸ்ரார்சோஷ்டியும் உடுவில் சஸ்ரைஸ் சோஷ்டியும் மோதியபோது ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

உடுவில் ஸ்ரார் முதலாம் இன்னிங்சில் 51 ஓட்டங்களையும் இரண்டாம் இன்னிங்சில் 82 ஓட்டங்களையுமெற்றன்கொண்டது.

சன்ரைஸ் முதல் இன்னிங்சில் 42 ஓட்டங்களையும் இரண்டாம் இன்னிங்சில் 5 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 32 ஓட்டங்களையும் பெற்றது.

.....

விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம் சனி

வடிடு திருநாவுக்கரசு சனிமிட மகாவித்தியாலய இல்லங்களுக்கு வருடாந்த விளையாட்டுப்போட்டி வட்டு இந்துசமய குடிவிருத்திச் சங்க விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. விக்கிறியால்பற் தலைமையாசிரியர் திரு. க. மயிலவாகனம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் வட்டுக்கோட்டைத்தொகுதி ஆசிரியர் உறுப்பினர் திரு ஆ. திருவரராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். வட்டாரக் கல்வி அதிகாரி திரு வி. சச்சிதானந்தன், திரு ச. இராசரத்தினம் ஆகியோரும் பொறுப்பேற்றனர். ஆப்பர் இல்லம் போட்டியில் முதலிடத்தைப் பெற்று வெற்றிக்கேடயத்தை ஈட்டிக்கொண்டது.

வெற்றி

யாழ்ப்பாணம், சனி

மாஷையூர் சென். ஆன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தும், புத்தளம் "போர்ட்டன்" கழகத்துக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், சென். ஆன்ரனிஸ் கழகம் 3—2 கோல்களால் வெற்றி பெற்றது.

யாழ். தரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். (தே நி)

கவிப் முடிவுகள்

கோட்டை, வெள்ளி

செல்ற புதன்கிழமை அரசாங்கவிதியில் இழுக்கப்பட்ட தேசிய கவிப்பின் 390-வது சீட்டிழுப்பின் முடிவுகள்.

முதலாவது பரிசு

23 X 0008 ரூ. 74,520

இரண்டாவது பரிசு

20 X 0622 ரூ. 29,080

மூன்றாவது பரிசு

14 A 0613 ரூ. 7,452

தலா 372 ரூபா 60 சதம் பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு.

08 A 0598	26 A 0502
14 A 0132	27 A 0403
23 A 0370	06 B 0759
16 B 0690	10 B 0039
07 B 0367	11 C 0759
22 C 0857	02 C 0857
01 D 0460	20 D 0723
20 D 0141	23 D 0728
11 E 0847	33 E 0322
04 E 0558	06 B 0717
15 E 0108	21 E 0908
07 F 0644	11 F 0836
13 F 0649	21 F 0748
30 F 0096	20 G 0235
03 G 0992	18 G 0247
05 G 0275	10 G 0331
02 H 0157	05 H 0978
06 H 0341	23 H 0384
06 H 0827	05 J 0680
08 J 0387	01 J 0064
09 J 0446	15 J 0042
33 K 0606	22 K 0195
13 K 0784	02 K 0231
03 K 0707	32 L 0994
13 L 0130	15 L 0812
26 M 0289	08 M 0968
15 N 0393	08 N 0441
01 N 0465	15 N 0911
27 N 0197	10 N 0695
12 N 0072	12 N 0046
25 N 0602	
23 O 0717	33 O 0066
19 O 0681	10 O 0845
22 P 0762	02 P 0344
23 P 0405	09 P 0859
23 Q 0304	23 Q 0306
14 Q 0060	23 Q 0955
20 R 0989	11 S 0060
10 S 0448	05 S 0636
30 S 0358	16 T 0325
15 T 0219	15 T 0796
25 T 0260	25 T 0331
10 T 0715	17 U 08 9
13 U 0735	13 U 0570
08 V 0597	14 V 0040
02 W 0689	04 X 0408
25 X 0651	22 X 0254
20 X 0236	27 Y 0689
31 Y 0056	05 Z 0937
15 Z 0708	18 Z 0006
18 Z 0489	

.....

பதில்

மீசாலை, வெள்ளி

மிருகவதை புனித நீக்கிகள் இயக்கம் யாழ்ப்பாணம்-கொடிகாமம் பஸ் சேவையைப் பகிஷ்கரிக்கும் விக்கிரிக்குமாறு கோரி இ. போ. ச. யாழ். அதிபதிக்கு அனுப்பியதாக மாஜருக்கு மேலதிக பஸ் வண்டிகள் கிடைத்தும் இக்கோரிக்கை வெள்ளிக்கிழமையே படுமென்று அதிபர் பதிலளித்துள்ளார்.

"மக்களை நசுக்கும் சட்டத்தை எதிர்ப்போம்"

வேலணைச் செய்திகள்

வேலணை, வெள்ளி

வேலணை பெட்ரோல் நிலையம் பெட்ரோலியம் கூடுகிறதான உத்தியோகத்தர் விசேஷ வர்த்தமானி அறிவித்தலின்படி ஏற்கப்பட்டு வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பெட்ரோல் முதலான எரிபொருள் விற்பனையை ப. நோ. கூ. சங்கம் நடத்திவருகிறது.

பெற்றோல் நிலைய கையளிப்பு வைபவத்திற்போது தீவுப்பகுதி எம். பி. சங்கர முன்னாமையார் திரு. மாணிமுத்து, சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வேலணை ப. நோ. கூ. சங்கம் பீடி உற்பத்தி விற்பனையையும் ஆரம்பித்துள்ளது.

அரசினிடமிருந்து கிடைத்த 500 ரூத்தல் பீடிப்புகையிலையைக் கொண்டு சங்கம் தொழிலை ஆரம்பித்துள்ளது.

மிளகாய்ப்பயிர் பாதிப்பு

வேலணைப் பகுதியில் மிளகாய்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து மழை இல்லாமல் இக்கு நிலவும் வரட்சி விளைவும் ஒருவகை புழு மிளகாய்ச் செடியைப் பீடித்துள்ளதாலும் மிளகாய்ச் செய்கை பாதிக்கப்பட்டு விலையில் வெளிநாடு வலைக்குள்ளாகியுள்ளனர்.

திருட்டு

வேலணை மண்கொண்டான் பகுதியிலுள்ள மிளகாய் முடை ஒன்றை வைத்திருந்து அவையில் உள்ள தனது வீட்டிற்குச் சென்ற எஞ்சிய மிளகாயை எடுக்கச் சென்ற ஒருவர் திரும்பிவந்து பார்க்கையில் முன்னர் வைத்த மிளகாய் திருட்டுக்கு இலக்காகியுள்ளதைக் கண்டு நிலைகுலைந்தார்.

கடையில்முன் வைத்துப் பூட்டப்பட்டிருந்த மண்ணெண்ணெய் தகரத்தின் மேலும் அதனுடன் கூடிய பூட்டும் வல்லவாடியில் திருட்டுப்போயுள்ளது. நள்ளிரவில் நடைபெற்ற இத்திருட்டினால் தகரத்தில் இருந்த 40 லீற்றர் மண்ணெண்ணெய் விரயமாயது.

நியமனம்

வேலணை சரஸ்வதி வித்தியாலய உதவி ஆசிரியர் திரு. ந. ஈசுவரமூர்த்தி செம்பியபுலம் தமிழ்வித்தியாலயத்தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றுள்ளார்.

கம்புறுப்பிட்டியா, வெள்ளி

மக்களை மக்கள் விரும்பத்தகாத நசுக்குகின்ற எந்தவொரு சட்டத்தையும் கம்யூனிஸ்ட்டுகள் எதிர்த்தே தீரும், மக்களைக் காப்பாற்றும் நோக்குடனேயே கம்யூனிஸ்ட்டுகள் குற்றவிசாரணை நீதிக்கமிஷன் நசோதாவுக்கு வாக்களிக்கவில்லை.

கம்யூனிஸ்ட் எம் பியான கம்புறுப்பிட்டியா ஆட்சி மன்ற அங்கத்தவர் திரு. ஏலியன் நாணயக்காரா இத்தொகுதியில் நேசவாளரொன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் பொருட்களின் விலையாசியேற்றமும் நாட்டுப்பாடும் மக்களுக்கும் பெரும் கஷ்டத்தைக் கொடுத்துள்ளது என்றார்.

மாத்தறை உதவி அரசாங்க அதிபர் இவ்வைபவத்தில் உரையாற்றுகையில் நாங்கள் அரசியல்சுதந்திரம் பெற்றிருந்தாலும் இன்னும் பொருளாதார சுதந்திரத்தைப் பெறவில்லை. பொருளாதார சுதந்திரம் பெற நிலவளமும் வளமான உழைப்பும் தேவையென்றார். ——

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

15—4—72 சனி

(செய்திகள், காலை 6-00 மணி12-45, மாலை 6,00 இரவு 9-00)

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 மாலைநற்சிந்தனை 6-25 கதிரோலிக்க நற்சிந்தனை சங். பிரா. சேவியர் 6-30 செய்திகள் 6-50 தமிழ்பாடல் 7-15 காலைமஞ்சரி 7-30 மாலைவரை செய்திகள் 7-35 குரல்வலை 8-00 இசை வேலை 1. எஸ். மாலிக்கக் 2. எஸ். நிகநாயகம் மோகன் 8-15 இன்னிசையிதம் 6-10 அறிவிப்புகள் 6-16 பண்ணிசைப்பதிகம் 6-30 மாலிடு எம். ஏ. ஜலீலநாதன் 7-00 கிராமியச்சித்திரம் பிரதி ஆக்கம்- ஆர். ஜெயஜோதி 7-30 உலகச் செய்திகள் 7-35 வாரொலி குறுக்கெழுத்துப் போட்டி இலக்கம்: 25 நடத்துபவர்: எஸ். சிவராசா இரவு 9-10 அறிவிப்பு 9-20 விளையாடுத்துறைச் செய்திகள் 9-30 நாடகம் கவிதை நாடகம் எழுதியவர்: மனகவி.

வார்.

நெடுந்தீவு, புங்குடுதீவு ஆகிய இடங்களில் உதவி நகர அதிகாரராக கடமையாற்றிய திரு. பி. உபிள்பூ. சொலின், வேலணை நகர அதிகாரர் அதிபரராக நியமனம் பெற்றுள்ளார்.

இதோ மீண்டும் வருகிறது!

தினசரி அதிர்ஷ்டம்
(நாளாந்த சீட்டிழுப்பு)

சிறப்பானவாய்ப்பு
திடீர்ச்
செல்வந்தராகும்
16 ஏப்பிரல்

இன்றே ஒரு சீட்டை வாங்கி
நாளையே செல்வந்தராகுங்கள்

தேசிய லொத்தர் சபை

"திகதி நிர்ணயிக்கு முன் எம்முடன் ஆலோசித்திருக்கலாம்"

நல்லூர் எம். பி. விளக்கம்

யாழ்ப்பாணம், சனி

"தமிழ்க் காங்கிரஸ் பொதுச்செயலாளரினால் 72 ஜனவரி 23-ம் திகதி செயல் கமிட்டி கூட்டமொன்று கூட்டப்பட்டதாகத்தெரிந்து, அழைப்பு கிடைத்தவர்கள் கூட்டம் நடைபெற்ற மண்டபத்திற்குள் செல்ல விடாது தடுக்கப்பட்டதோடு கூட்ட நிகழ்ச்சியிலும் பங்கு பற்றாமல் எங்களால் தடுக்கப்பட்டார்கள். கமிட்டியில் சில உறுப்பினர்களை தவிர மிகுதிப்பேர் தங்களுடைய ஆதரவினைக் கருதுகிறேன்", நல்லூர் எம் பி. திரு. சி. அருளம்பலம், தமிழ்க்காங்கிரஸ் செயலாளர் திரு. நா. சுந்தரப்பிள்ளைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: தங்களுடைய இல்லத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அழைத்து கொண்டு கூட்டத்தை செயல்மிழந்ததாக கூட்டமல்ல என தலைவர் மறுப்பு தெரிவித்துள்ளார். ஜனவரி 23-ம் திகதி ஒத்திவைக்கப்பட்ட கூட்டம், உறுதியளிக்கப்படாமலே ஏன் கூட்டப்பட்டதென எனக்குத் தெரியவில்லை. சில சமயங்களிலும் கூட்டங்களுக்கும், வழக்கமான நடைமுறைக்கும் முரண்பாடாக இப்பொழுது புதிய கூட்டமொன்று கூட்டப்பட்டுள்ளது.

எங்களைப் பற்றியோ, எங்கள் கோரிக்கைகளைப்பற்றியோ கூட்டத்தில் விளாதிக்க விரும்பினால் எங்களுக்கு வசதியான ஒரு திகதியையும், நேரத்தையும் தெரிவித்திருந்தால் முறையானதாக இருந்திருக்கும் என்பதாகவே கருதுகிறேன்.

நல்லூர் எம் பி. திரு. சி. அருளம்பலம், தமிழ்க்காங்கிரஸ் செயலாளர் திரு. நா. சுந்தரப்பிள்ளைக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: தங்களுடைய இல்லத்தில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அழைத்து கொண்ட கூட்டத்தை செயல்மிழந்ததாக கூட்டமல்ல என தலைவர் மறுப்பு தெரிவித்துள்ளார். ஜனவரி 23-ம் திகதி ஒத்திவைக்கப்பட்ட கூட்டம், உறுதியளிக்கப்படாமலே ஏன் கூட்டப்பட்டதென எனக்குத் தெரியவில்லை. சில சமயங்களிலும், வழக்கமான நடைமுறைக்கும் முரண்பாடாக இப்பொழுது புதிய கூட்டமொன்று கூட்டப்பட்டுள்ளது.

எங்களைப் பற்றியோ, எங்கள் கோரிக்கைகளைப்பற்றியோ கூட்டத்தில் விளாதிக்க விரும்பினால் எங்களுக்கு வசதியான ஒரு திகதியையும், நேரத்தையும் தெரிவித்திருந்தால் முறையானதாக இருந்திருக்கும் என்பதாகவே கருதுகிறேன்.

3-2-72 திகதியிட்ட ஒரு அறிவித்தல் எனது கந்தோரில் 5-4-72ல் கிடைத்தது. அக்கடிதம் அறிவித்தல் எனக்கு 7-ம் திகதிகிடைத்தது. 9-ம் திகதி என் உறவினரின் திருமண வைபவமொன்று கொழும்பிலிருந்ததால் நான் அக்கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாமல் போனதென்பதை தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ஆனந்தசங்கரி வன்னிக்கு சென்றிருந்தார். திரு. நியாராசா குறுகியகால அறிவித்தலில் பிறபோட முடியாத வேறொரு அழைப்பை ஏற்றிருந்தார். நாங்கள் சமுகமளிப்பதை உங்ளையில் நீங்கள் விரும்பியிருந்தால் திகதியை நிர்ணயிக்கு முன் எங்களுடன் கலந்தாலோசித்திருக்கலாம்.

1969-ல் கோலாலம்பூரில் நடந்த வருடாந்த பொதுக் கூட்ட அறிக்கையையும் பொதுச்சபை, செயற்கமிட்டி உறுப்பினர்களின் பெயர்களையும் அனுப்பி வைக்குமாறு. இறுதியாக கேட்டுக்கொள்கிறேன். இவ்வாரங்களுக்கும் இப்பிரதிகளை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

.....

நகைகள் பிடிபட்டன!

யாழ்ப்பாணம், சனி

முறைகேடாகும் மாக்கு வரத்தகுமிடமாக மலை ஒன்றில் இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் பெறுமதியான நகைகளைக் கொண்ட சூட்கேஸ் ஒன்று திருட்டுப் போய்விட்டதாக இரத்தினசிங்கம் சிவராஜா என்பவர் பொலிஸில் புகார் செய்திருந்தார். இவரைத் தொடர்ந்து சூட்கேஸும் நகைகளையும் கண்டெடுத்ததாகக் கொடியார் செல்வராஜா என்பவரையும் பொலிசார் சந்தேகத்தின் மீது கைது செய்தனர்.

——

3கோடி 90லட்சம் வருமானம்

கொழும்பு, செப்டெம்பர் 3 மாதங்களில் கைத்தொழில் அமைச்சுக்கு கைத்தொழில் உற்பத்திகளினால் 3 கோடியே 90 லட்சம் ரூபா ஆண்டிய செலாவணி வருமானம் கிடைத்துள்ளது

இத்தொகை எதிர்பார்த்ததிலும் அதிகமானது என கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்பட்ட கிராக்கியே இந்த அன்னிய செலாவணி வருமானப் பெருக்கு காரணமாகக் கூறப்படுகிறது.

——

இன்று 227 நிலையங்களில் பரீட்சை

கொழும்பு, செப்டெம்பர் இன்று நாடெங்கும் 227 நிலையங்களில் ஜி சி ஈ உயர்தரப் பரீட்சை நடைபெறுகிறது.

இப் பரீட்சைக்கு 23000 மாணவர்கள் பரீட்சார்த்திகள் உட்பட 32000 பரீட்சார்த்திகள் தோற்றுகிறார்கள்.

புனர்வாழ்வு முகாம்களில் உள்ள 601 பயிலுநர்களாகச் சேர்ந்தவர்களும் இப் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். இவர்களின் பரீட்சைக்கட்டணத்தை அரசே செலுத்த வேண்டும். கட்டணம் அவர்களிடம் அறவிடப்படக் கூடாது என ஆட்சியமைச்சு அலுவலகம் அமைச்சர் திருரத்னாவுக்கு கேட்டுக் கொண்டதற்கிணங்க கல்வியமைச்சர் இவர்களது கட்டணங்களை பெறவேண்டாமென உத்தரவிட்டுள்ளார்.

வாக்குகண்ணை குணமாக்க...

கொழும்பு, செப்டெம்பர் வாக்குக்கண்ணைக் குணமாக்கி அதன் வாக்குத் தன்மையை நீக்குவதற்கு இலங்கை கண் ஆஸ்பத்திரி நவீன வைத்திய உபகரணங்களோடு கூடிய சிகிச்சை நிலையம் ஒன்றை விரைவில் நிறுவ நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

கண்ணாஸ்பத்திரி அதிபர் டாக்டர் டி. எஸ். ஆர். குணவர்த்தன இந்த சிகிச்சை நிலையத்தான உபகரணங்கள் விரைவில் நடுவிக்கப்பட இருப்பதாகவும் ஏற்கனவே இத்துறையில் பயிற்சி பெற்ற ஒரு வைத்திய அதிகாரி இந்த ஆஸ்பத்திரியில் கடமையாற்ற வருகை தரவும் தெரிவித்தார்.

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், சனி

'சர்வதேச நோக்கில் வேத்துரையாடல்' என்னும் தலைப்பில் இன்று பிற்பகல் யாழ்டாக்லி விதியில் சித்திராலய கட்டிடமே மேல் மாடியில் ஒரு கலந்துரையாடல் நடைபெறவிருக்கிறது. இலக்கிய நண்பர் கழகம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

அளவெட்டி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமலையில் பிடிபட்டது.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு கிளிநொச்சியில் ஒரு வீட்டிலிருந்து திருடப்பட்ட சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான நகைகள் திருக்கோணமலையில் ஒரு நின் வீட்டுவளவுக்குள் புதைக்கப்பட்டிருந்ததைப்பொலிசார் கண்டெடுத்தனர்.

இக்கொள்ளைச் சம்பந்தமாகப் பொலிசார் தொடர்ந்து புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

வலி - வடக்கில் முதலாவது கள்ளுச்சங்கம்

மாவிட்டபுரம், செப்டெம்பர் சேர்ந்தொழிலாளர் மரபுவழி முறையாக அனுபவித்து வந்த கஷ்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து அவர்கள் வாழ்வு மறுமலர்ச்சியடையவே தனிமுறை அமுலுக்கு வருகிறது. இதற்கு சேர்ந்தொழிலாளர்களிடமிருந்த நல்ல ஆதரவு கிடைத்துள்ளது என்று அனலைதீவு மக்களால் கள் விற்பனையுச் சங்கத்தை ஆரம்பித்துப் பேசுகையில் வலி-வடக்கு கலிடுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க. கந்தசாமி கூறினார்.

வலிவடக்கில் முதல் ஆரம்பிக்கப்பட்ட கள்விற்பனையுச் சங்கமான இச்சங்க ஆரம்ப விழா அனலைதீவில் நேற்றுக் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற சபையில் திரு. க. கந்தசாமி சம்பிரதாய முறைப்படி சங்கத்தை ஆரம்பித்துவைத்துப் பேசினார்.

நள்ளிரவு விபத்தில் சாரதி மரணம்

ஞானாதுறை, செப்டெம்பர் ஞானாதுறை வடக்கு ஸ்ரீ சுமங்கலா வீதிச் சந்தியில் சென்ற புதன்கிழமை நள்ளிரவில் ஏற்பட்ட விபத்தொன்றில் லாடலைக் கார் சாரதி ஸ்தலத்திலேயே மாண்டார்.

மேற்படி லாடலைக்காரில் வந்த 8 பேரும் இவ்விபத்தில் காயமடைந்து நாரோடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்

மாத்தறையில் நடைபெற்ற மரணச் சடங்கொன்றில் கலந்து கொண்டு திரும்பி வந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டது.

ஞானாதுறை வடக்கு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கிங்ஸ்லி இவ்விபத்துச் சம்பந்தமாகப் புலன் விசாரணை செய்கிறார்

ஆலய வருவாய்களை அரசு ஏற்கவேண்டுமாம்

கொழும்பு, செப்டெம்பர் தேவாலயங்கள், கோயில்கள், மசூதிகள் மற்றும் மத நிறுவனங்கள் வாயிலாக தம் வருவாயை அரசு ஏற்க வேண்டும்.

பௌத்தகோட்பாடுகளுக்கு உள்ள தர்மபதாவையில் நடைபெற்ற 'சிங்கள தருமச் சங்கிரகவை, இளைஞர் பௌத்தகுடும்ப நிறுவனம் ஆகிய இரண்டினதும் இணைப்புக்கூட்டத்தில் மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வண சொரததேரோவின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்படி தீர்மானத்தைக் கொண்டுவந்த வண ஆலவல குணவன்ஸ தேரோ பேசுகையில் சைவ மத நிறுவனங்களின் தம் வருவாயை பொறுப்பேற்க அரசுக்கு இதுவே தகுந்த தருணம் எனக் குறிப்பிட்டார். வரலாற்று ஆதாரங்கள் வாயிலாகவே சைவ மத நிறுவனங்களையும் முன்னேற்றுவதற்கு திட்டம் ஒன்று வகுக்கப்படவேண்டும். நாடு சோஷலிச பாதையில் செல்ல முற்படுவதால் சைவ இயக்கங்களும் இன, மத, அரசியல் வேறுபாடுகளை உதறித் தள்ளிவிட்டு ஒரு குடைக்கீழ் ஒன்றிணைந்து பொதுவான ஆன்மீக முற்றுப்புள்ளி வைக்க செயல்பட வேண்டும்' என மேலும் கூறிய வண குணவன்ஸ தேரோ கூறினார்.

.....

"அலுமினியத் தொழிலாளருக்கு

சம்பள நிர்ணயசபை உருவாக்க வேண்டும்"

மாவிட்டபுரம், செப்டெம்பர் 14

அலுமினியம் தொழில் வேலை செய்யும் சில தொழிலாளர்களுக்கு ஒரு சம்பள நிர்ணயசபை உருவாக்கப்பட வேண்டும் என்று தொழில் அமைச்சரைக் கோரும் தீர்மானம் ஒன்று வலிகாமம் தொழிற்சங்கங்களின் சம்மேளன வடமாகாணக் கிளையின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இன்று ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் வெளியிடப்படும் தொழிற்சட்டங்களை தமிழ் மொழியிலும் வெளியிட வேண்டும் என்றும் கொழும்பில் உள்ள வெளிவட்டங்களில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் அளவு யாழ்ப்பாணத்திலுள்ள தொழிலாளருக்கும் வழங்கப்பட வேண்டுமென்றும் வேலையிலிருந்து நீக்கப்படும் தொழிலாளர் அது பற்றி மனுப்பண்ணும் காலவரையை 3 மாதமாகக் குறைத்துள்ளதை நீக்கி காலவரையை ஒரு வருடமாகக் கூட்டவேண்டுமென்றும் கோரும் தீர்மானங்களும் பட வேறுபல தீர்மானங்களும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

.....

படிப்பகத்தில் 2-வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், சனி

முனாய் ஐக்கிய இளைஞர் முன்னேற்றச்சங்க படிப்பகத்தின் இரண்டாவது ஆண்டுவிழா இம்மாதம் 16ம் திகதி நிலைய முன்றலில் கொண்டாடப்படவுள்ளது.

படிப்பகத் தலைவர் திரு. வொ. பாது தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக இலங்பாதிப தலைமையாசிரியர் கா. ஞா. யோசேப் கலந்து கொள்கிறார்.

கலந்துகொண்ட ஆசிரியர் மற்ற உறுப்பினர் திரு. ஆ. இராசரத்தினம், திரு. ஆ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் உட்பட வேறுபலரும் பேசுவர்.

——

=தகவல்

ஆசிரியர்களுக்கு 3 வருட சிறைத்தண்டனை

லாகூர், ஏப். 14

லாகூரிலிருந்து வெளிவரும் முன்ற பத்திரிகை ஆசிரியர்களுக்கு லாகூர் நீதிமன்றம் 3 வருடச் சிறைத் தண்டனை விதித்ததுடன் 13 ஆயிரம் ரூபா குற்றப்பணமும் விதித்துள்ளது

மன்முறைச் சம்பவங்களைத் தூண்டும்வகையில் கட்டுரைகள் செய்திகள் வெளியிட்டார்கள் என இவர்கள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

——

இடமாற்றம்

வல்வெட்டித்துறை, செப்டெம்பர் 14

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய டாக்டர் திரு. பாலகிருஷ்ணன் இராஜரத்தினம் மத்திய ஆஸ்பத்திரிக்கு உதவி வைத்திய அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இன்று

காரைநகரில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், சனி

வைத்தொழில் விவசாயக் கருத்தரங்கு காரைநகர் இந்துக்கல்லூரி நடராஜா மண்டபத்தில் இன்றுகாலை 10 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

காரை அபிவிருத்தி சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கை யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசப் ஆரம்பித்து வைப்பார்.

வழக்கறிஞர் வே. தில்லைநாதன் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் திரு. வர்கள் பி. சுந்தரப்பிள்ளை, எஸ். செல்வராஜா, கி. திருக்கேதீஸ்வரம், செ. இராசரத்தினம், எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் விரிவுரையாற்றுவார்கள்.

——

நேர்முகப் பரீட்சை

சுன்னாகம், செப்டெம்பர் 14

வலிகாமம் மேற்குப்பகுதி கல்வி நிலையங்களுக்கான கணக்காளர் மனேஜர் ஆகியோருக்கான நேர்முகப் பரீட்சை வலி-மேற்கு காரியாலயரீதியில் காரியாலயத்தில் நடைபெற்றது.

கோரிக்கை

கல்விளைவாடு, செப்டெம்பர் 14

கல்விளைவாடு சந்தையில் உள்ள 11-ம் இலக்க யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்கடையில் விலை நிர்ணயம் பொருட்களைப் பெறும் மக்கள் படும் கஷ்டத்தை நிவர்த்திக்கும் வகையில் மக்கள் நிற்பதற்கேற்ற வகையில் கூடாரம் அமைத்தோ அன்றி வேறுவகையோ கடைகளை மாற்றியோ தரும்படி இக்கடையில் பொருட்களைப் பெறும் மக்கள் யாழ். தரமுதல்வரையும் கடைமுகாமையாளரையும் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

மணிவாக்கு

அர்மையிலே ஆர்மையாய்த்தொழ
இன்னை நற்பயன் எய்துந் திண்ணமே.
சோலைமலர் கொண்டு போற்றுவார்
மாலர் போலவே மாண்பு வாழ்வரே.
— சோமசுந்தரமிகள்

எழுநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "ELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] பரிநாபி வருஷம் சித்திரை மாதம் 2-ந் திகதி (15-4-72)

மீண்டும் வியட்னாம்!

திகிலப்பப் பார்த்தவுடனேயே நகைக்கத் தூண்டு வேறு பொருள் கிடைக்கவில்லையோ என்று வாசகநேயர்களை சிலர் நினைக்கக் கூடும். "மூக்கிருக்கும்வரை சளி வரத்தான் செய்யும்" என்று சொல்வார்கள். அதேபோல் வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியிருக்கும்வரை வியட்னாம் பிரச்னையும் தீராது. வியட்னாமிலிருந்து எங்கோ தொலைவிலிருக்கும் நாமும் கூட அதன் தாக்கத்துக்குள்ளாகத்தான் வேண்டும். எனவே வியட்னாம் பிரச்னை எங்கோ இருப்பதல்ல. நமக்கும் நாளை அதே கதி நேரலாமென்பதால் நாமும் அதுபற்றி அக்கறை கொள்ள வேண்டியது அவசியமே!

வியட்னாமில் இப்பொழுது கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தென்வியட்னாமையும் வடவியட்னாமையும் பிரிக்கும் படை விலக்கு பகுதியையும் தாண்டி வடவியட்னாம் படைகள் தென்வியட்னாமுக்குள் நுழைந்து தென்வியட்னாம் தரைப்படையையும் பிடித்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேசமயம் வடவியட்னாம் படைகள் அங்கு நுழைவதைக் கண்டு வியட்னாம் விடுதலை முன்னணியினர்தான் 'வியட்னாமியர் தான்' போர் புரிகிறார்களென்றும் தென்வியட்னாம்மீது தாக்குதல் நடத்துவதற்காக வடவியட்னாம்படை கெடுப்பு நடத்திவரக் குற்றம் சுமத்துவது அமெரிக்காவின் வழமையான தந்திரம் என்றும் வடவியட்னாமியர் கூறுகின்றனர்.

மார் எப்படிச் சொல்லினும் வியட்னாம் மக்கள் அமைதியுடன் வாழவிரும்பினாலும் வல்லரசுகள் அதற்கு விடுமா? கொடுக்கத் தயாராகவில்லை. அமெரிக்கா, சோவியத் யூனியன், சீனா ஆகிய மூன்று வல்லரசுகளும் இப்பிரச்னையில் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பது உண்மை.

பாரிசில் நடைபெற்று வந்த வியட்னாம் அமைதிப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் அமெரிக்காவும் வடவியட்னாமும் சம்மதித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. வடுடக்கணக்காகப் பேச்சு நடப்பதும் அதேசமயம் சண்டை நடப்பதும் சர்வசாதாரண நிகழ்ச்சியாகி விட்டது.

வியட்நாம் நிலைமையை ஆராய நிக்ஸன் தனது தூதுவரை அனுப்புவதால் பயன் இல்லை. நமக்கு பிரச்னையைத் தாங்களே தீர்வாகித்துக் கொள்ளட்டும் என்று வியட்னாமை வியட்னாமியரிடமே விட்டுவிட்டு வல்லரசுகள் அங்கிருந்து வெளியேறுவதுதான் அவர்கள் செய்யக்கூடிய நல்ல காரியம். இன்று வியட்னாமில் நடப்பது நாளை நமக்கும் நடக்கலாம் என்பதை உணர்ந்து இலங்கை உலகிடை உலக நாடுகள் அனைத்தும் வல்லரசுகளை அகிருந்து வெளியேறும்படி வற்புறுத்துவதுதான் வியட்நாமிலும் உலகிலும் அமைதியேற்படுத்தச் செய்வதற்குள்ள வழியாகும்.

திருநெறிய தெய்வீக மகாநாடு

நல்லை ஆதீன கர்த்தர் ஆசி

யாழ்ப்பாணம், சனி

கலை இலக்கியத் திருநெறிய தெய்வீக மகாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் அப்பர் குருபீடத்தில் நடைபெறுகின்றன. புலவர்மணி ஏ. வெரியமுத்துப்பிள்ளை தலைமையில் பிற்பகல் 3-00 மணிக்கு பூஜை வழிபாடு. மங்கள இசை, திருமுறை ஓதல் முதலிய வற்றுடன் விழா ஆரம்பமாகும் 4-00 மணிக்கு சிவ. உ. சோமசேகரம் வாழ்த்துரை வழங்குவார். கொடர்ந்து சிவஸ்ரீ சி. பரமேஸ்வரக் குருக்கள் திருமுறை ஓதி ஆசியுரை வழங்குவார். அடுத்து புராணபடனம்.

5 மணிக்கு திருமுறையும் 'நமது நாடும்' என்னும் பொருளில் வித்துவான் சி. ஆறுமுகமும், 'ஐயாற்றில் அருளடப்பிள்ளையார்' பற்றி வித்துவான் மு. சொரத்தினமும் சிறப்புரை நிகழ்த்துவர். 7-00 மணிக்கு கவியரங்கம், கவிஞர் வீ. கந்தவனம் தலைமையில் கவிஞர்கள் இ. நாகராஜன், மு. சோமசுந்தரம்பிள்ளை, வே. செல்வநாயகம், வரவர. செ. சுந்தரம்பிள்ளை, சேந்தன், வே. ஐயாத்துரை, எருக்கலை மோகன் ஆகியோர் கலந்து கொள்ளுகின்றனர். இரவு 8-00 மணிக்கு அருட்கவி சி. விநாசித் தம்பியின் 'அருளாளர் அப்பர் சுவாமிகள்' என்னும் பொருள்பற்றிய இன்னிசை விரிவுரை 9-00 மணிக்கு பக்திப்பாடல் அரசு ஏ. ஆர். கிருஷ்ண மூர்த்தியின் திருமுறப் பண்ணிசை

மாநாடு தொடர்ந்து இம்மாதம் 17 ம் திகதியன்று நடைபெறும். 18 ம் திகதி செவ்வாய்க்கிழமையிலிருந்து 20 ம் திகதி வியாழக்கிழமை வரை ஞானசம்பந்தப் பெருவிழா நிகழும். 18 ந் திகதி ஞானப்பால் உற்சவமும் 19 ம் திகதி பொற்றாள் உற்சவமும் 20 ம் திகதி முத்துச் சிவிகை உற்சவமும் நிகழும்

மதுரை காமகோடி தானம் வாழ்த்து

திருநெறியமகாநாட்டிற்கு மதுரை காமகோடி தானம் வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார் அச்செய்தி வருமாறு:

இவ்வாண்டு 14-4-72 முதல் 20-4-72 வரை அவ்விடம் மடாலயத்தில் ஞானப்பால் உற்சவமும் திருநெறிய தெய்வீக மகாநாடும் கொண்டாடத் திருவருள் கூடியிருப்பதை அறிந்து மகிழ்கின்றோம்

ஞானப்பால் உற்சவமும் திருநெறிய தெய்வீக உற்சவமும் யாதொரு விக்கினமுமின்றி வெகு விமரிசையாக நடைபெறவும் அதிற் கலந்துகொள்ளுகின்ற பக்தர்கோடிகளும், அதற்குப் பக்கபலமாகவும் உதவி புரிந்த அடியார்கள் அனைவரும், எல்லா நலன்களும் பெற்றுத் திழவும் திருவருள் பாலிக்குமாறு எல்லாம் வல்ல ஆலயத்தின்கண் பங்கனூர் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்."

அதிபர் நிக்ஸன் கனடா விஜயம்

வாஷிங்டன், ஏப். 14

அமெரிக்க அதிபர் நிக்ஸன் கனடாவுக்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார். இவர் கனடாப்பிரதமர் திரு. ரூடோவுடன் உலக நிலைமைகள்பற்றியும், முக்கியமாக வியட்னாம் பிரச்னை கள்பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தினார்என எதிர்பார்க்கப்படுகிறது அதிபர் நிக்ஸன் மூன்றுநாள் கனடாவில் தங்கியிருப்பார்.

புதுவருட "ஸ்பெஷல்" பச்சடி!

புதுவருடப் பிறப்பன்று ஒரு நாள் மாலைப் பத்திரிகையொன்றிலிருந்தார். ஏன் என்று கேட்டதற்கு, அறுசுவையும் கலந்த ஒரு பச்சடியை ஆண்டு செய்வது வழக்கமென்றும் அதற்காகவே மாவிலைப் தோரணம் கட்டுவதாகவும் தெரிவித்தார்.

இனிப்புக்கு வெல்லம், காரப்புக்கு வேப்பம்பூ, புளிப்புக்கு மாங்காய், துவர்ப்புக்கு மருதங்காய்க்குள் உள்ள பருப்பு, காரத்துக்கு பச்சைமிளகாய், ஒரு கை உப்பு இந்த அறு சுவையும்கலந்த "ஸ்பெஷல் பச்சடியை புதுவருடத்தன்று செய்து பழைய வழக்கமாம்.

இன்பம் வருவதில் துன்பமடுகிறோம். துன்பம் நேர்வதில் மனமுடைந்து விடுகிறோம். வாழ்க்கையிலே எல்லாவித அனுபவங்களும் ஏற்படுவது சகஜம். எல்லாவற்றையும் சரிசமமாகவும் இறைவனின் அருள் என்றும் கருதும் மனப்பக்குவம் ஏற்படவேண்டுமென்ற கருத்துடனேயே அறுசுவையும் கலந்த "ஸ்பெஷல் பச்சடி" யை புதுவருடத்தன்று சாப்பிடுவது வழக்கம் என்றும் கூறினார்.

"சுவைக்கும் இரண்டையும் சமமாகப் பாவித்து, மனதில் பொறாமையற்ற கேடு

ஐயாறன் எழுதுவது

நினையாருக்கு. குறைவொன்றும் வாராது நிர்மல சித்தத்தோடு ருப்பார்க்கு பயமேது?" என்ற பழைய பாட வொளிறு நினைவு புலருகிறது

புதுவருடத்தில் ஏற்படும் எல்லாவித அனுபவங்களையும் மகிழ்ச்சியுடன் ஏற்று ஆண்டை வரவேற்க இன்புறுவோமாக! இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

0 0 0

காற்றுக்காக நேற்று யாழ்ப்பாணம் பண்ணைப்பாலத்துக்கு ஓர் அலுவலுடன் சென்றேன். சூரியன் அஸ்தமிக்கும் நேரம். மண்டைதீவுப்பக்கத்திலிருந்து யாழ்நகரைப் பார்க்கையில் இயற்கை அழகு கொஞ்சியது. கமான காற்று' வரவை வரவிருக்கிற ஒரு சிறந்த அதிகாலை இதை அனுபவித்தவர்.

கடலின் நடுவே போடுகிற இப்பாலத்தில் மின் வெளிச்சம் போடுவதுடன், பாலத்தை மேலும் விஸ்தரித்து ஆங்காங்கே உல்லாச ஆசனங்களும் அமைத்து அழகான பூங்கா காஷ்மீர் ஏரிகளில் உள்ளதுபோல் உல்லாசத் தோணிகள், சிற்றுண்டி விடுதிகள் முதலியன ஏற்படுத்தினால். இது உலகிலே ஒரு நல்ல "டூரிஸ்ட்" இடமாகலாம். யாழ் மாநகர சபையினர் இதைப்பற்றி சற்றே எண்ணிப்பார்களா!

பலவருடங்களுக்கு முன்பாக, முதலியார் முத்துத் தம்பி அவர்கள் யாழ் நகரசபை மெம்பராக இருக்கையில், இவ்விதமான பல நல்ல யோசனைகளைக் கொண்டு வந்து நிறைவேற்றியதாக அறிந்தேன். ஆனால் எல்லாம் ஏட்டளவிலிருந்தன். நம் நகருக்கு ஒரு நல்ல புதிய மார்க்கெட் கிடைத்துள்ளதுபோல் பண்ணைப்பாலத்தையும் சேலை முறையில் புதுவருடத்தில் அபிவிருத்தி செய்ய முயற்சி எடுப்பீர், மாநகரசபையினர் பெருமக்களின் நன்றிக்குப் பாத்திரமாவார்கள்.

அத்தோடு யாழ்ப்பாண நகருக்குள் 'டவுன் பஸ் சர்வீஸ்' ஏற்படுத்தி பண்ணை, நல்லூர் உள்ளிட்டு எந்தப் பகுதிக்கும் வசதியாகச் செல்ல, இரு சாரவுடன் பேசி, மாநகரசபை தக்க ஒழுங்குகள் செய்வது மக்களுக்கு அதிக வசதியளிப்பதாக இருக்கும்.

0 0 0

மண்ணில் நல்ல எண்ணம் வாழலாம் வையகமும், எண்ணில் நல்ல எதிர்கால வாதமோர் குறைவில்லை. எண்ணில் நல்லன்தரு எழுமலையனார், பெண்ணில் நல்லாளொடு பெருந்தகை இருந்ததே.

— திருஞானசம்பந்த வரமிகள்.

நாயகம் திரும்புவோர் பற்றி

இலங்கை-இந்திய அரசுகள் ஆலோசனை

புதுடில்லி, ஏப் 14

சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் தாயகம் திரும்பும் இந்திய வம்சாவழியினரை மேலும் விரைவாக அனுப்பிவைப்பது சம்பந்தமாக இருநாடுகளும் இப்பொழுது தொடர்பு கொண்டுள்ளன.

இந்தவகை இன்று இந்திய ஆட்சியின்றத்தில் தெரிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக ஆராய்ந்தவர்களுக்கேட்ட கேள்விகளுக்கு உதவி அமைச்சர் சரேந்திரபாண்டே பதிலளிக்கையில் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் சம்பந்தமான நடைமுறைச்சிடங்கள் இலங்கை அரசினால் 1968-ம் ஆண்டு தான் செயல்படுத்தப்பட்டதாகவும் இதனால் இது அமுலாவதில் தாமதம் ஏற்பட்டது என்றும் சொன்னார்.

பாஸ்போர்ட் யாருடையது

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் வளாகத்திலிருந்து வந்த பஸ்ஸில் இந்திய பாஸ்போர்ட் மற்றும் ஆவணங்கள் கிடக்கக் கண்டெடுத்த சரவணை மேற்கைச் சேர்ந்த [illegible] என்பவர் எழுநாடு காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

நாளை கூடுவர்

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் புங்குடுதீவுக் [illegible] மகா வித்தியாலய (கெ. மி. ஆங்கிலப் பாடசாலை) பழைய மாணவர் கழகம் திரு கி. சதிரவேற்பிள்ளை எம். பி. தலைமையில் நடைபெற இருக்கிறது.

இன்று

கழிபுரம், சனி

பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலில் நடைபெறும் வைரவர்மி கோடி அர்ச்சனையை முன்னிட்டு இரவு வழக்கம்போல் ச. ச. நிலையம் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டுள்ளது. 'நிலையக்குரல்' என்னும் இம்மலர் வெளியீட்டு விழாவுக்கு கழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு க. சந்தானசாமி தலைமைதாங்குவார். குரல் ஆசிரியர் திரு க. வாமதேவன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

0 0 0

புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலைமன்றத்தினரின் 10வது ஆண்டுவிழா இன்று காலை 8-30 மணிமுதல்காலை 10 மணிவரை நடைபெறும். காலையில் சாரதா நிலைய சேவாசிரமத்தைச் சேர்ந்த இராதாசைதன்யாவின் பிரசங்கமும் மாலையில் சமரசக் கச்சேரியும் கலைநிகழ்ச்சிகளும் நாடகங்களும் இடம் பெறும். இவ் விழாவிற்கு திரு மு. சோமசுந்தரம் தலைமை வகிப்பார்.

தெல்லிப்பழை பழைய மாணவர் சங்கத்தின் இரண்டாம் வருடாந்த ஒற்றுமை விழா இன்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் சமாதான நீதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்வார்.

இவ் பத்திரிகை "எழுநாடு" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 15-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது